RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s131

OPEN ACCESS

# சங்க காலச் சமூகமும் பின் நவீனச் சமூகமும் - ஓர் ஒப்பீடு

செ. மார்ட்டின் ராஜா [அ, *], மு. இராஜசேகரன் [அ]

[அ] தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவுப் பெற்றது), திருச்சிராப்பள்ளி-620017, தமிழ்நாடு, இந்தியா

# A Comparison of Sangam Society and Postmodern Society

**S. Martin Raja [a, *], M. Rajasekaran [a]**

[a] Department of Tamil, Bishop Heber College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli-620017, Tamil Nadu, India

* Corresponding Author: smartinraja@yahoo.com

Received: 30-05-2022
Revised: 13-08-2022
Accepted: 02-09-2022
Published: 06-10-2022

Check for updates

## ABSTRACT

The Sangam age society is an ethnic society based on the divisions of five thinai lands and a society that accommodates pluralistic ideas. In this context, postmodernism, which originated in western art and literature, is seen in the Tamil context as a thought to bring out the state of society after the nineties. On this basis, the definitions of the society of the Sangam age and the definitions of postmodern society are taken up. The comparison of these two societies also provides a comparatively critical explanation. Love has been transformed from being the basis of marriage to today's casteist background. The man-leader and his friend's guidance have been the cure for the malady of the Marutham woman. But the lovesickness of a woman who is in love today is cured by her old age. In this article, the situation where women are fighting for their livelihood in adulthood like Ovvai, admired by Athiyaman, and the situation where education has been liberalized, privatized, and commercialized by globalization in a society where the importance of education has been emphasized, has been explained in a way that compares the society during the Sangam period and the post-modern society.

**Keywords:** Sangam Era Society, Post-Modern Society, Kalavu Community and Caste, Avvaiyar, Education and Commercialization

## முன்னுரை

பாட்டும் தொகையும் சங்க காலச் சமூகத்தை நமக்கு பிரதிபலித்துக்காட்டுகின்றன. கலை, இலக்கிய தளங்களில் ஒவ்வொரு நாளும் புதிய சிந்தனைகள் தோன்றிய வண்ணமுள்ளன. அவற்றுள் காலத்தை வென்று நிற்கின்றச் சிந்தனைகள் மட்டுமே கோட்பாடுகளாகின்றன. அந்தவகையில் குறிப்பிடத்தக்கச் சிந்தனைகளாக நவீனத்துவக் கோட்பாடுகள் நோக்கப்படுகின்றன. அவற்றிற்குப் பின் வந்த பின் நவீனத்துவச் சிந்தனைகள் இதுவரைப் பின்பற்றி வந்த தத்துவக் கோட்பாடுகளைக் கேள்விக்குட்படுத்தி அவற்றின் போதாமைகளைச் சுட்டிக்காட்டுகின்றன. குறிப்பாக, இன்றைய பின் நவீனச் சமூகத்தின் நிலைமையை வெளிக்கொணருகின்றச் சிந்தனையாகவும் பார்க்கப்படுகின்றன. இப்புரிதலின் அடிப்படையில் சங்க காலச் சமூகத்துடன் இன்றையப் பின் நவீனச் சமூகத்தைத் தமிழ் நவீனக் கவிதைகளின் மூலம் ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## சங்க காலச் சமூகம் - வரையறை

சங்க காலச் சமூகம் திணை அடிப்படையிலான இனக்குழுச் சமூக அமைப்பாகும். திணை சார்ந்த நெறிகள், களவொழுக்கம் திருமணத்தில் முடிதல், கற்பொழுக்கம், போர் நெறிமுறைகள், பாணர், புலவர், பரிசில் மரபு, கொடை, விருந்தோம்பல், நட்புப் பாராட்டுதல், சான்றோர்களைப் போற்றுதல், ஒற்றைச் சமயச் சார்பின்மை முதலியவை சங்க காலச் சமூகத்தின் விழுமியங்களாகவும் அறங்களாகவும் போற்றப்பட்டுள்ளன. "பழந்தமிழ்ச் சமூகத்தில் பன்முகவியமும் (Pluralism) அது சார்ந்த மனநிலைகள் மற்றும் கருத்தமைவுகளும் ஆழமாக வேரூன்றிக்கிடக்கின்றன. இத்தகைய திணைசார் வாழ்க்கையும் அதன் பல்வேறு பரிமாணங்களும் அதனுடைய முக்கியத்துவமும், இனக்குழுச் சமுதாயம் (Tribal society) என்ற நிலையிலிருந்து, ஆநிரை வளர்ப்பு-வேளாண்புரட்சி (Pastrral Agricultural Revolution) என்ற சமூக நிலைமை அல்லது உருவாக்கம் (Social Formation) ஏற்பட்ட காலப்பகுதி வரை, உயிர்ப்புடன் இருந்தன." இவ்வாறு சங்க காலச் சமூகம் ஒரு 'திறவை நிலை சமூகமாகவும்' (Open society) இருந்துள்ளது என்பதையும் அறியமுடிகிறது (Natarajan, 2020).

## பின் நவீனச் சமூகம் - வரையறை

'பின் நவீனத்துவ நிலை' (Post Modern Condition) என்பது தமிழ்ச் சூழலில் தொண்ணூறுகளுக்குப் பிறகு, சமூகத்தின் நிலைமையை விவரிக்கின்ற சொல்லாகத் திறனாய்வாளர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். "பின்னை நவீனத்துவ சிந்தனை சில தீவிரமான நிலைப்பாடுகளை முன்வைக்கிறது. மரபுரீதியான பழைய சமூகங்கள் கொண்டிருந்த கருத்துநிலைகளையும் நவீன முதலாளிய சமூகம் அறிவித்திருந்த பல்வேறு சமூக இலக்குகளையும் அது அடிப்படையான மறுபரிசீலனைக்கு உட்படுத்துகிறது. சிந்தனை வாழ்வில், ஒற்றைக் கோட்பாடுகளிலிருந்து துவங்கி உலகம் தழுவிய அளவிற்கு வளர்க்கப்படும் எல்லாவகைக் கருத்தியல்களையும் அது ஏற்க மறுக்கிறது. அவ்வகைக் கொள்கைகளைப் பின்னை நவீனத்துவம் ஒட்டுமொத்தப்படுத்துபவை (Totalising), மேலாதிக்கப் பண்புகொண்டவை (Hegemonising) என்று மதிப்பிடுகிறது. இறைவன், தனிமனிதன், அறிவு, சமூகம், மானுட விடுதலை என்பது போன்ற புள்ளிகளை மையமாகக் கொண்டு மொத்த உலக நோக்கும் கட்டி எழுப்பப்படுவதை அது மறுதலிக்கிறது. துண்டு துண்டானவை, தொடர்பற்றவை, பன்மியப்பாங்கு கொண்டவை, நேர்க்காட்சித் தளத்தவை ஆகியவை பின்னை நவீனத்துவத்தால் பாராட்டப்படுகின்றன." என்று பின் நவீனத்துவத்தின் கூறுகளை எடுத்துரைக்கின்றார் (Muthumohan, 2015). இந்நிலையில், பின் நவீனச் சமூகமென்பது, "அதிகாரக் குவிப்புக்கு எதிராகவும், சமூகக் கட்டமைப்பின் இறுக்கத்திற்கு எதிராகவும் ஆதிக்கங்களுக்கு எதிராகவும் மனிதர்களை நெகிழ வைக்கின்ற, கலகம் செய்யத் தூண்டுகின்ற, கட்டுகளை உடைத்தெறியச் செய்கின்ற நேர்க்கோட்டு லட்சிங்களையும் பொய்மைத் தன்மையையும் தோலுரித்துக் காட்டுகிறது." என்று வரையறுக்கின்றார் (Kovai Gnani, 1997). நவீனச் சமூகக் கட்டமைப்பையும் அதிலுள்ள அதிகாரத்தையும் எதிர்க்க மக்களை ஒன்றுதிரட்டும் பணி பின் நவீனச் சமூகத்தில் நடைபெறுகிறது. சமூகத்தில் மையம் x விளிம்பு என்ற பிரிவினையை ஏற்படுத்துதல், கலகம் செய்ய தூண்டுதல், அமைப்பைத் தகர்த்தல், பகடி செய்தல், எல்லாவற்றையும் முரண் நகைக்குட்படுத்துதல், மொழி விளையாட்டு, நகல் உண்மைகளை உண்மையெனக் கொள்ளுதல் போன்ற பண்புகளைக் கொண்டச் சமூகமாகப் பின் நவீனச் சமூகம் திகழ்கிறது.

## ஒப்பீடு - விளக்கம்

கலை, இலக்கியங்களுக்கிடையே ஒன்றுபட்ட பண்புகளை ஒப்பிட்டுப் பார்ப்பதே ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு எனப்படுகிறது. "ஒப்பீட்டுத் திறனாய்வு என்பது இலக்கியங்களை ஒப்பிடுவதில் மட்டுமே கவனம் செலுத்துகின்றது. ஒரே மொழியிலுள்ள இலக்கியங்களையும் - ஒரே படைப்பாளியின் வெவ்வேறு இலக்கியங்களையும் - அதுபோல ஒரே நாட்டிலுள்ள வெவ்வேறு நாட்டு இலக்கியங்களையும் - என்ற தளங்களில் இலக்கிய ஒப்பீடு நிகழ்த்தப் பெறுகின்றது." என்று தி.சு. நடராசன் விளக்குகின்றார் (Natarajan, 2020).

## களவும் கற்பும் - காதலும் சாதியும்

சங்கத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூற்றில் இரவுக்குறியிடத்து வருகின்ற தலைவன் வழியில் எதிர்கொள்கின்ற இடர்பாடுகளாக, காட்டாற்று வெள்ளம், நீரின் நிறத்தை மறைக்கும் மலர்கள், கற்பாறைகளில் பதுங்கி இருக்கும் முதலைகள், நீர்ச்சுழிகள், குட்டியைத் தழுவாத களிற்றுயானையின் அச்சம் தரும் தோற்றம், நீர்த்துறைகள் ஏற்படுத்தும் அச்சம் முதலியனவற்றைக் குறித்துத் தோழி தலைவனுக்கு எடுத்துரைப்பதைப் பின்வரும் பாடலொன்று,

"நீர் நிறம் கரப்ப, ஊழுறுபு உதிர்ந்து,

பூமலர் கஞலிய கடு வரற் கான் யாற்று,

நீடு இன்று ஆக இழுக்குவர், அதனால்,

உலமரல் வருத்தம் உறுதும், எம் படப்பைக்

கொடுந் தேன் இழைத்த கோடு உயர் நெடு வரை,

பழம் தூங்கு நளிப்பின் காந்தள் அம் பொதும்பில்,

பகல் நீ வரினும் புணர்குவை - அகல் மலை

வாங்கு அமைக் கண் இடை கடுப்ப, யாய்

ஓம்பினாள் எடுத்த, தட மென் தோளே."

என்று அமைந்துள்ளது. சங்க காலச் சமூகத்தில் குறிஞ்சி நிலத் தலைவன் களவொழுக்கத்தையே பெரிதும் விரும்புகின்றவனாக இருந்துள்ளான். தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்கின்ற மனமின்றி ஒவ்வொரு நாளும் இரவுக்குறியிடத்து வந்து செல்கின்றான். இதனை அறிந்தத் தோழி, தலைவனிடம் இரவுக்குறியிடத்து ஏற்படும் துன்பத்தினை எடுத்துக்கூறி இனி பகற்குறியிடத்து வரும்படிக் கூறுகின்றாள். பின்னர், காலப்போக்கில் இதற்கும் இடர்பாடுகள் வருமென்பதை நன்கு அறிந்திருந்தத் தோழி, தலைவனுக்குக் குறிப்பால் உணர்த்தித் தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென வலியுறுத்துகின்றாள். இது சங்க காலச் சமூகத்தில் களவொழுக்கத்திற்குப் பிறகிலான கற்பு வாழ்க்கையில்தான் முடியுமென்கிற அறச்சிந்தனை மேலோங்கியிருந்ததைக் காட்டுகிறது (Jayabal, 2011). இத்தகைய உயர்ந்தப் பண்புகள் இன்றைய பின் நவீனச் சமூகத்தில் எவ்வாறு இருக்கின்றன என்பதை பின்வரும் றாம் சந்தோஷின் கவிதை,

"யானை உருவகத் தலைவன்தான் என்றாலும்

வரும் வழியின் கடினம்

உன் தலைவிக்கும் வருத்தம்.

பக்கம் சொல்லேன் ரா, பகல் குறிகளை?

ஏன், அக்கம் பக்கத்து வீட்டாரெல்லாம்

வெட்டிப் போடவா வேற்று சாதியோன் உன்னையுங்

கூடவே என் தலைவியை?"

என்று குறிப்பிடுகிறது (Ram Santhosh, 2018). சங்க காலத்தில் தலைவன், தலைவிக்கு இருந்த நில அமைப்பு, களவொழுக்கம், கற்பு வாழ்க்கை, தோழியின் நெறிக்காட்டுதல்கள், இரவுக்குறி, பகற்குறி முதலியன சமகாலத்தில் காதலர்களுக்கு இல்லைபென்பது புலப்படுகிறது. பெருகி வருகின்ற பன்னாட்டு நுகர்வுக் கலாச்சாரங்கள், சந்தைமயப் பொருட்குவியல்கள் முதலியனவற்றால் இன்றைய இளைஞர்கள் கவர்ந்திழுக்கப்பட்டுள்ளனர். எதையும் முழுமையாக ஆராய்ந்து முடிவெடுக்கின்ற மனநிலையின்றி இருக்கின்றனர். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான தொடர்பினை இன்றைய சமூக ஊடகங்கள் எளிதில் சாத்தியமாக்கியிருக்கின்றன. இந்நிலையில் ஆணும் பெண்ணும் காதல் செய்வது சமூகத்திற்கு

எதிரான நிலைப்பாடாகச் சாதியம் கட்டமைத்துள்ளது. இதனை அடியொற்றியே ஆணவக்கொலைகள் நிகழ்வதைச் சமூகத்தின் சமகாலக் போக்குகள் எடுத்துக்காட்டுகின்றன. சங்க காலச் சமூகத்தில் ஒழுக்கமாகப் போற்றப்பட்டு வந்த காதலுக்குரிய பண்புகள் இன்றையப் பின் நவீனச் சமூகத்தில் காதல் சாதிக்கு எதிரானதாக மாறியிருப்பதை அறியமுடிகிறது.

## தலைவியின் பசலை நோயிலிருந்து - காதல்வயப்பட்டப் பெண்ணின் நிலை மாறுபடுதல்

களவொழுக்கத்தில் தலைவன், தலைவியுடன் இருக்கும் பொழுது உடலில் பசலை நோய் இல்லாமலும் தலைவியை விட்டு தலைவன் பிரிந்து செல்லுமிடத்து பசலை நோய் உடலில் பரவியும் காணப்படுவதை குறுந்தொகை, பரணர் பாடலொன்று பின்வருமாறு,

“ஊருண் கேணி உண்டுறை தொக்க

பாசி யற்றே பசலை, காதலர்

தொடுவுழித் தொடுவுழி நீங்கி

விடுவுழி விடுவுழிப் பரத்த லானே”

என்று தலைவன் வரைவு நீடித்த இடத்துத் தலைவி தோழிக்குச் சொல்லியதாக இப்பாடலின் கூற்று அமைகிறது. கேணி நீரில் கைவைத்துக் கலக்கும் போது அதில் படர்ந்திருக்கும் பாசியானது விலகியும் கையை மேலே எடுத்தவுடன் மீண்டும் பாசியால் கேணி நீர் மூடிக்கொள்வதைப் போல, தலைவி தன் உடலில் படர்ந்துள்ள பசலை நோயானது தலைவன் கைப்பட்டவுடன் விலகியது என்றும் தலைவன் பிரிந்து சென்றதும் உடலில் பசலை நோய் படர்ந்தது என்றும் தோழியிடம் குறிப்பிடுகின்றாள். தலைவிக்கு ஏற்படுகின்ற பசலை நோய்க்கு மருந்தாகத் தலைவன் இருந்துள்ளான். தலைவன், தலைவி இருவருக்குமிடையில் உறவின் பாலாமாகத் தோழி இருந்திருக்கின்றாள். தலைவன், தலைவியின் உள்ளத்து உணர்வுகளைப் புரிந்து கொண்டு குற்றம் குறைகளைச் சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்துகின்றவளாகவும் தலைவியின் நம்பிக்கைக்குரியவளாகவும் தோழி இருந்துள்ளாள். மருதநில மக்கள் கேணியிலிருந்து நீரை எடுத்துக் குடிநீராகப் பயன்படுத்தியுள்ளனர். தலைவன், தலைவி, தோழி, மக்கள் முதலியோர் சமூகமாகக் கூடி வாழ்ந்துள்ளனர் என்பதான செய்திகள் சங்க காலத்தில் தனிமனித ஒழுக்கமே சமூகத்தின் ஒழுக்கமாக இருந்துள்ளது. அவரவர் கடைமைகளைப் பொறுப்புடன் நிறைவேற்றுபவர்களாக இருந்துள்ளனர் (Aravendhan, 2016). இந்த நிலைமை இன்றைய பின் நவீனச் சமூகத்தில் முற்றிலுமாக மாறியுள்ளன. தனிமனிதனுக்கும் சமூகத்திற்குமான உறவு கானல்நீராக உள்ளது. இதனால் தனிமனிதச் சுயநலப் பண்புகள் மேலோங்கி இருக்கின்றன. தனிமனிதச் சுதந்திரமானது குடும்பம், சமூகம், கல்வி, அரசியல், பொருளாதாரம் முதலியவற்றிலிருந்து விலகி தேவைக்கு ஏற்ப இணக்கமாகவும் முரண்படுகின்ற மனநிலைக்கு இட்டுச்சென்றுள்ளது. மேலும், தனிமனித வாழ்க்கையில் இலக்குகள் எதுவுமின்றி எல்லாவற்றையும் வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் செய்து முடிக்கின்ற பண்பும் காணப்படுகிறது. தனிமனித விருப்பங்கள், ஆசைகள் நிறைவேறாத போது பதற்றத்திற்கும் குழப்பத்திற்கும் வழிவகுக்கிறது. இறுதியில், தோல்விகளும் ஏமாற்றங்களும் வரும்போது தனக்குத்தானே சமரசம் செய்து கொள்கின்ற போக்கும் தனிமனிதப் பண்புகளுள் ஒன்றாகப் பார்க்க வேண்டியுள்ளது. இதன் பின்னணியில் அமைந்த ‘மருதநிலத்தாள்’ என்ற கவிதையில்,

“தலைவன் நினைவு ஈரம் படிந்து

மனச்சுவர் முழுவதும்

பாசான் பூத்துக்கிடந்தது

வதுவை நாளுக்காக காத்திருந்தாள்

தங்கையின் வளையலை எடுத்தணிந்து

கொண்டாள்

மழை ஓய்ந்த மாலைப் பொழுதொன்றில்
எதையோ நினைவூட்டியது
தனிமையின் தாய்வீடாய் இரவு
கனவுகளின் படையெடுப்பில்
ஒவ்வொரு இரவும்
போர்க்களமாக மாறிப் போனது
காதல் தரும் நோய்களின்
அத்தனை வேதனைகளையும்
அனுபவித்திருந்தாள்
எவர் கண்களுக்கும் நோயாளியாகத்
தெரியவில்லை
பகற்குறி குடும்பச் சுமைகளைத் தூக்கி
தலையில் வைத்தது
தன்னைத் தானே தேற்ற
தள்ளப்பட்டாள்
ஓரிரு வயது கூடினால்
எந்தவொரு மருந்திடாமலும்
இக்காதல் நோய்
முற்றிலும் தீர்ந்துவிடும்."

என்பது, இன்றைக்கு ஒரு பெண்ணுக்குள் காதல் வரும்பொழுது தனிமைப்படுத்திக் கொள்தல், திருமணத்திற்காகக் காத்திருத்தல், தங்கையின் வளையலை அணிதல், குழப்ப மனநிலை, தனிமையில் புலம்புதல், உறக்கமின்மை, கனவுகளால் வரும் பதற்றம், காதலால் ஏற்படும் வலி, வேதனைகள், தன்னை நோயாளி என்று கருதாதவரிடத்து கரிசனத்தை எதிர்ப்பார்த்து வருந்துதல், குடும்பப் பொறுப்பை ஏற்றல், தனது உடலில் ஏற்பட்டுள்ள காதல் நோய்க்கு மருந்தாக தன்னைத்தானே தேற்றிக் கொள்ளுதல், இறுதியில், வயது முதிர்வில் இக்காதல் நோய் தானாகக் குணமாகிவிடும் என்ற மனநிலையைக் கொண்டிருத்தல் என்பன கையறுநிலையில் எல்லாவற்றையும் இழந்து புலம்பும் சராசரிப் பெண்ணின் நிலை வெளிப்படுகின்றது (Poorna, 2016). சங்க காலத்தில் மருதநிலத் தலைவிக்குப் பசலை நோய் ஏற்பட்ட போது தோழி அவளுடன் இருந்து நெறிப்படுத்துவதைக் காணமுடிந்தது. ஆனால், பின் நவீனச் சமூகத்தில் காதல்வயப்பட்ட ஒரு பெண் உறவுகளின் அரவணைப்பு எதுவுமின்றி நிற்பதை அறியமுடிகிறது.

## ஔவையும் - பின் நவீனச் சமூகத்தில் மூதாட்டியும்

அதியமான் நெடுமான் அஞ்சி தகடூரை ஆட்சி புரிந்த குறுநில மன்னன் ஆவான். ஔவையும் அதியமானும் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தனர். 'உண்டாரை நெடுங்காலம் வாழ வைக்கக்கூடிய அருநெல்லிக்கனி' ஒன்றை தான் உண்ணாமல் ஔவைக்குக் கொடுத்து உண்ணச் செய்கின்றான் என்ற வாய்வழி மரபில் ஒரு கதை சொல்லப்பட்டு வருகிறது. இந்நிலையில், பகைவர் ஏழு பேரை ஒரு போரில் வென்று அவர்களின் அணிகலன்களையும் அரச உரிமைகளையும் அதியமான் கவருகின்றான். இறுதியில், பெருஞ்சேரல் இரும்பொறையால் போரில் பகைவர் எறிந்த வேல் மார்பில் பட்டு

உயிரிழக்கின்றான். அதியமானின் இழப்பையும் ஆற்றாமையையும் ஔவையார் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்.

“சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே

பெரியகட் பெறினே

யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே

ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ

இனிப், பாடுநரு மில்லைப் பாடுநர்க்கொன் றீகுநருமில்லைப்

பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்

சூடாது வைகியாங்குப் பிறர்க்கென்

றீயாது வீயு முயிர்தவப் பலவே.”

புறநானூற்றின் இப்பாடல் அதியமானின் வள்ளல் தன்மை, விருந்தோம்பல் பண்பு, போர்த்திறம், பரிசில் வழங்கும் முறை, பாணர்கள், புலவர்கள் குறித்துப் புகழ்ந்து பாடுகின்ற ஔவையார், இனி பாடுவோரும் இல்லை, பாடுவோர்க்குப் பரிசு வழங்குநரும் இல்லை என்று வருந்துவதாக அமைந்துள்ளது. அதியமானின் இறப்பிற்குப் பின்னர் புலவர்களுமில்லை, புலவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளலுமில்லை என்று ஔவையார் தன் துயரத்தை வெளிப்படுத்துகின்றார். சங்க காலச் சமூகத்தில் அதியமான் நெடுமான் அஞ்சி நல்ல கருத்துக்களையும் சிந்தனைகளையும் மக்களுக்குக் கொண்டு சேர்க்கின்ற ஔவையார் நீடுழி வாழவேண்டுமென அவரை போற்றி பாதுகாத்துள்ளார் (Dhuraisamypillai, 2010). எனினும், இன்றைய பின் நவீனச் சமூகத்தில் குறிப்பாக, குடும்பங்களில் பெரும்பாலனோர், அவரவர் பணிகளைச் செய்வதற்கே நேரமில்லை என்று புலம்புகின்றனர். இந்நிலையில், மூதாட்டியைப் பராமரிப்பது சிரமம் என்று கருதி கைவிடப்படுகின்றார். சிலர் ஆதரவு இல்லங்களிலும் பொது இடங்களிலும் கவனிப்பாறற்று இருப்பதைக் காணமுடிகின்றது. இந்த நிலைமையைக் கவனத்திற்குட்படுத்துகின்ற வகையில் லிபி ஆரண்யாவின் ‘அதியனின் அடிவயிற்றில் அவ்வையின் பழக்கத்தி’ என்ற தலைப்பிலமைந்தக் கவிதை,

“உள்ளே சொல்லீத்தீராத கதையில்

மரத்தோடு பிணைக்கப்பட்ட வடைக்கிழவியென

பள்ளியின் நுழைவில்

இவளைக் கட்டிவைத்தது யார்

கூறுகட்டி வைத்திருக்கும்

முழுநெல்லிகளின் முன்பாக

அவள் வேறு சாயல் கொள்கிறாள்

அரை ரூபாய்க்கும் சீந்துவாரற்ற

ஒரு கனியைக் கையில் திணித்து

சாகாவரமளித்ததாய் பேச்சைப் பெருக்கிய

அந்தப் போக்கிரியைத்தான் தேடிக்கொண்டிருக்கிறாள்”

என்று பதிவுசெய்கிறது. சங்க காலச் சமூகத்தில் அதியமான் நெடுமான் அஞ்சியால் ஔவை என்ற முதியவருக்குக் கிடைத்த அரவணைப்பு இன்றையப் பின் நவீனச் சமூகத்தில் அரவணைப்புகள் எதுவுமின்றி இருப்பதைப் பார்க்கமுடிகிறது. மேலும், உடல்மெலிந்து வலுவிழந்து தள்ளாடும் நிலையில் வடைசுட்டு விற்பது, பள்ளியின் முன் பழங்கள் விற்பது அதில் வரும் வருமானத்தைக் கொண்டு உயிர் வாழ்ந்து வருகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் (Libi Aranya, 2013). இவ்வாறு சங்க காலச் சமூகத்தில்

ஔவையை அரவணைத்த மன்னனின் பண்பை ஔவையின் சாயலை ஒத்த முதியவளின் நிலைமையோடு ஒப்பிட்டு பகடி செய்கின்ற போக்கும் பின் நவீனச் சமூகத்தில் காணமுடிகின்றது.

## கல்வியின் பயன் - வியாபார மயமாதல்

சங்க காலத்தில் கல்வியின் பயனைச் சமூக நிலையிலிருந்து விளக்குகின்ற புறநானூற்று பாடலொன்று,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே!

பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்

சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்

ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்

மூத்தோன் வருக என்னாது, அவருள்

அறிவுடை யோன்ஆறு அரசும் செல்லும்

வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே."

என்பது, மாணவர் ஆசிரியருக்குத் துன்பம் வருமிடத்து உடனிருந்து உதவ வேண்டும். ஆசியருக்குப் பொருளுதவி செய்து தர வேண்டும். ஆசிரியரைத் தனக்கு முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். இத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றிக் கல்வி கற்பதே சிறந்த கல்விமுறையாகும், ஒரே தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகளாக இருப்பினும் அதில் கற்றறிந்த நற்பண்புகளை உடையவனிடமே தாயின் மனம் திரிந்து செல்லும், ஒரே குடும்பத்தில் பிறந்தவர்களாக இருப்பினும் கற்றவனுக்கே ஆட்சியும் அதிகாரமும் வழங்கப்படும், கற்றறிந்தவனால் மட்டுமே மக்களைப் பாதுகாக்க முடியும், நால்வகை வர்க்கப் பிரிவுகளில் கீழ்க் குலத்தில் பிறந்த ஒருவன் கல்விக் கற்றுச் சிறந்தவனாக இருப்பின் மேல்குலத்தில் பிறந்தவனும் அவனுக்கு அடங்கியே செல்வான் என்பன சங்க காலச் சமூகத்தில் கல்வியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டுகிறது (Dhuraisamypillai, 2010). இந்த நிலைமை இன்று முழுவதுமாக மாறி, கல்வி தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல் ஆகிய கொள்கைகளால் கல்வி சந்தைப் பொருளாக்கப்பட்டுள்ளது. 'காடஸ்' (General Agreements on Tariffs and Trade) ஒப்பந்தத்தின்கீழ் 'டங்கல் திட்டம்' (1994) கொண்டுவரப்பட்டு கல்வித்திட்டங்கள் பன்னாட்டுமயப்படுதல், எல்லை தாண்டிய விற்பனை, இணையவழி பயிற்றுவித்தல் முதலியன அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு பின் நவீனச் சமூகத்தில் கல்வி வியாபாரப்பொருளாக மாறியுள்ளது. "கல்வியை எடுத்துக்கொண்டால், நம்நாடு பின் நவீனத்துவக் கல்விமுறையை அனுசரிக்கிறது எனக் கூறவேண்டும். எப்போதும் இல்லாத அளவிற்கு இன்று கல்வி வியாபாரப்பொருளாக மாறிவருவதைக் காண்கிறோம்" (Pillai, 2009). இதனடிப்படையில் பின்வரும் இராஜசேகரனின் கவிதையொன்று,

"புகைப்போக்கி அகற்றப்பட்ட

அரிசி ஆலையில்

தடுப்புச்சுவர்கள் முளைத்து வகுப்பறைகள் ஆயின

ஆஸ்பெஸ்டரஸ் வேயப்பட்ட நீண்ட அரிசி குடோன்

ஹார்டுபோர்டு உபயத்தால் மாணவர் விடுதி அறைகளாயிற்று

பக்கத்து முனியாண்டி விலாஸ் விடுதி உணவகமாயிற்று
நெல்காயப் பயன்படுத்தப்பட்ட சிமெண்ட் தளம்
நாற்புறமும்சுவர் எழுப்பிக் கொண்டு
பரிசோதனைக் கூடங்களாயின
அண்டையிலிருந்த டூரிங் டாக்கீஸ் கலையரங்கமாய் உருமாறிற்று
பட்டம் பெற்ற சுயசாதிக்காரர்கள் பேராசிரியர்கள்
பூம்புகார் பொறியியல் மற்றும் தொழிற்நுட்பவியல் கல்லூரி
உங்களை அன்புடன் வரவேற்கிறது."

என்பது, இன்றைக்கு அரிசி ஆலைகள் - வகுப்பறைகள், அரிசிக் கிடங்குகள் - விடுதிகள், முனியாண்டி கடை - விடுதி உணவகம், நெல் உலர்த்தும் தரை - சுவர் எழுப்பப்பட்ட பரிசோதனைக் கூடங்கள், திரையரங்கம் - கலையரங்கம், சுயசாதியர்கள் - பேராசிரியர்கள், எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் - அலுவலர்கள், ஆலை அதிபர் - தாளாளர், திரையரங்க உரிமையாளர் - பங்குதாரர் முதலியவை கல்வி பின் நவீனச் சமூகத்தில் வியாப்பொருளாகப் மாற்றப்பட்டுள்ளது. சங்க காலச் சமூகத்தில் கல்வியின் பயனாகக் கற்றறிந்த சமூகம் உருவாக்கப்பட்டுள்ளது (Rajasekaran, 2017). ஆனால், இன்றைய பின் நவீனச் சமூகத்தில் கல்வி தனிமனிதனுடைய சுயலாபப் பொருளாக வணிகமயமாக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

## முடிவுரை

சங்க காலச் சமூகத்தில் காதலுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அறத்தோடு நின்று திருமண வாழ்க்கைக்கு வழிவகுத்துள்ளது. ஆனால் இன்று காதல் சாதிக்கு எதிரானதாக நிறுத்தப்படுகின்ற போக்குகள் மாற வேண்டும். மருதநிலத் தலைவிக்கு ஏற்பட்ட பசலைநோய் தோழியின் வழிகாட்டுதல் மருந்தாகின்றது. ஆனால், இன்று காதல்வயப்பட்ட பெண் முதலில் உறவுகளை பேணிக்காக்க வேண்டும். மனதை கட்டுப்படுத்தும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஔவையைப் போற்றி அரவணைத்தச் சமூகம் இன்று அவரது சாயலில் வாழ்வாதாரத்தைத் தேடி நிற்பவர்களைப் பாதுகாத்திட வேண்டும். கல்வி தனிநபர் இலாபநோக்காக மாறும்போது அது கருத்தியல் சார்ந்த சர்வாதிகாரச் சிந்தனைகளுக்கு வழிவகுக்கும். ஆகையால், கல்வி சமூக நீதியை நிலைநாட்டுவதாக அமைய வேண்டும்.

## References

Aravendhan, R., (2016) Kuruntokai, New Century Book House, Chennai, India.

Dhuraisamypillai, A.S., (2010) Purananoor Moolamum Uraiym, Poombukar Veliyeedu, Chennai, India.

Jayabal, R., (2003) Agananuru, Moolamum Vuraiyum, New Century Book house, Chennai, India.

Kovai Gnani, (1997) Tamilil Naveethuvam Pin Naveenathuvam, Kavya Veliyeedu, Chennai, India.

Libi Aranya, (2013) Ubari Vadaigalin Nagaram, Sandhya Publications, Chennai, India.

Muthumohan, N., (2015) Airoppiya Thaththuvangal, New Century Book house, Chennai, India.

Natarajan, T.S., (2020) Thiranaivuk Kalai Kolkaigalum Anugumuraigalum, New Century Book house, Chennai, India.

Pillai, A.S.T., (2009) Kalvi, Kalaacharam, Ilaakkiyam – Indraiya Nilavaram: Orr Pin Naveenathuva Nokku, Theresha Publications, Tiruchirappalli, India.

Poorna, (2016) Vaikkol Kandru Pasuvaanathu, New Century Book house, Chennai, India.

Rajasekaran, M., (2017) Pin Naveenathuva Punnagaigal, Mellow Publications, Tiruchirappalli, India.

Ram Santhosh, (2018) Sol Velith Thavalaigal Poems, Sonmai Publications, Vaniyambadi, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License